தோட்டக்கலைப் பயிர்களுக்கு வளம்தரும் புதிய பாசனமுறை

First Published : 25 Nov 2010 03:28:29 AM IST



பெரியப்பட்டு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் குழாய் நீர்ப்பாசனமுறை. (உள்படம்) இம்முறையை செயல்படுத்தி வெற்றி கண்ட ஓய்வுபெற்ற அரசு அதிகாரி ரங்கர

சிதம்பரம்: தோட்டக்கலை பயிர்கள் அருகில் பிளாஸ்டிக் குழாய்களை சொருகி, அதில் நீர் ஊற்றி செய்யப்படும் புதிய பாசனமுறை, சிதம்பரம் அருகே பெரியப்பட்டு கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு உள்ளது.

இதுகுறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது: மழை இல்லாத காலங்களில் தோட்டக்கலை பயிர்களை பாதுகாக்க மண் பானை வாயிலான நீர்ப் பாசனம் பரிந்துரைக்கப்படுகிறது. இந்த முறையில் நடைமுறைப் பிரச்சனைகள் காணப்பட்டன. இந்நிலையில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை பிரிவு இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்ற ரங்கராமானுஜம், பெரியப்பட்டு கிராமத்தில் இந்த புதிய நீர்ப்பாசன முறையை தனது ரங்கா உயர் தொழில்நுட்ப பண்ணையில் செயல்படுத்தி வெற்றி கண்டுள்ளார்.

இந்த புதிய நீர்ப் பாசன முறையில் பானைகளுக்கு பதிலாக நீண்ட பிளாஸ்டிக் குழாய்கள் (குழாய்களின் அடியில் சிறிதாக பல ஓட்டைகள் போடப்பட்டுள்ளன) தோட்டக்கலை பயிர்களுக்கு அருகில் புதைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு புதைக்கப்படும் குழாய்களில் தண்ணீர் ஊற்றப்படுகிறது. சிறிய ஓட்டைகள் வாயிலாக தண்ணீர் மெதுவாக தோட்டக்கலை பயிர்களின் வேர்ப் பகுதிக்கு சென்று சேர்வதால் மரங்கள் கடுமையான இயற்கை சீற்றங்களையும் தாண்டி வளர முடிகிறது.

அதிகளவு மழை பெய்யும் சமயத்தில் ஒருவரே எளிதாக இந்த பிளாஸ்டிக் குழாய்களை தங்களின் கைகளால் வெளியே எடுத்து விடலாம். இந்த பாசன முறையில் அதிகளவு வேளாண்

தொழிலாளர்கள் தேவையில்லை. பிளாஸ்டிக் குழாய்கள் எளிதாக உடைந்து விடாது. எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் குழாய்களை கடுமையான வெப்பம், தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் மீண்டும் பொருத்தலாம்.

பிற பயன்கள்: பழைய பிளாஸ்டிக் குழாய்கள், உடைந்த குழாய்கள் ஆகியவற்றை குறைந்த விலையில் பெற்று நீர்ப்பாசன முறையை நடைமுறைப்படுத்தலாம். பிளாஸ்டிக் வாயிலாக ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளை தவிர்த்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தலாம். குறைந்த செலவில் சிறந்த பாசன முறை வாயிலாக இயற்கை சீற்றங்களில் இருந்து நீண்டகால தோட்டக்கலை மரங்களை பாதுகாக்கவும், மகசூலைப் பெருக்கவும் முடியும். எனவே தமிழக விவசாயிகள் தங்களது தோட்டக்கலை பயிர்களுக்கு இப் புதிய நீர்ப் பாசன முறையை பயன்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்றார் ராஜ்பிரவீன்.

**அறுவடைக்கு முன் வருமானம்: மிளகாயில் புதிய அவதாரம்**

First Published : 25 Nov 2010 03:27:07 AM IST



புதுச்சேரி: விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காததால், மக்கள் மத்தியில் விவசாயம் செய்யும் ஆர்வம் குறைந்து வருகிறது. இதை உணர்ந்த மத்திய அரசு வேளாண் அமைச்சகம், விவசாய விளை பொருள்களில் இருந்து, மதிப்பு கூட்டு முறையில் பல்வேறு விதமான உணவு பொருள்களை தயாரித்து, அதை சந்தைப்படுத்தி, அதிக லாபம் ஈட்டும் வழிமுறைகளை விவசாயிகளுக்கு தெரிவித்து வருகிறது.

விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் கட்டுப்பாட்டில் இயங்கும் மத்திய பிரதேசம் இந்தூரில் உள்ள மத்திய அறுவடைக்கு முந்தைய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப மையம், பச்சை மிளகாய் பொடி மற்றும் பேஸ்ட் தயாரிக்கும் வழிமுறைகளை நேரடி பயிற்சி மற்றும் வானொலி வாயிலாக விவசாயிகளுக்கு தெரிவித்து வருகிறது.

இந்திய உணவு தயாரிப்பில், மிளகாய் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில்நுட்பம் காரணமாக மிளகாய், தற்போது பச்சை மிளகாய் பொடி, பேஸ்ட் வடிவில் புதிய அவதாரம் எடுத்துள்ளது.

மிளகாய் பயிர் பருவ பயிராக இருந்தாலும், மக்களின் அன்றாட தேவையாகிவிட்டதால், இப்பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்படுகிறது.

இப்பயிர் 4 மாதங்களில் மகசூல் தரக்கூடியது. எல்லா நேரங்களிலும் நல்ல விலை கிடைப்பதில்லை. பச்சை மிளகாய் கிலோ ரூ. 5 முதல் ரூ. 45 வரை அப்போதைய நிலவரத்துக்கு ஏற்றவாறு விற்பனை செய்யப்படுகிறது. இம்மிளகாய் பழுக்க மேலும் 30 நாள்கள் காத்திருக்க வேண்டியுள்ளது. மேலும் அதை உலர்த்தி விற்பனைக்கு எடுத்து செல்ல வேண்யுள்ளது. அப்போதும் நல்ல விலை கிடைக்கும் என்று கூற முடியாது.

அதனால் அறுவடைக்கு முன்னதாக, பச்சை மிளகாய் மதிப்பு கூட்டு முறையில், பொடியாகவும், பேஸ்ட்டாகவும் மாற்றப்படுகிறது. இவ்வாறு மாற்றப்பட்ட பொடி மற்றும் பேஸ்ட் கிலோ ரூ. 250 வரை விற்பனையாகிறது. இப்பொருள்கள், மிளகாய் பொடியை விட, பச்சை மிளகாய் பொடி மாறுபட்டது. அதை விட பல மடங்கு நறுமனத்தையும், சுவையையும் வழங்குகிறது. அறுவடைக்கு 30 நாள் முன்னதாகவும், கூடுல் வருவாயையும் தருகிறது. தற்போது இந்தூரில் மட்டும் இப்பயிற்சி வழங்கப்படுகிறது.


இது குறித்து புதுச்சேரி பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலைய மனையியல் வல்லுநர் ஆர்.விஜயலட்சுமி கேட்டபோது, அவர் கூறியது: தற்போது எங்கள் நிலையத்தில், பழங்கள், காய்கறிகள், தானியங்கள், பருப்பு வகைகள் உள்ளிட்ட பொருள்களை கொண்டு, மதிப்புக் கூட்டு முறையில், ஊறுகாய், ஜாம், இட்லி பொடி உள்ளிட்டவற்றை தயாரிப்பதற்கான பயிற்சிகளை வழங்கி வருகிறோம்.

சந்தைப்படுத்துவது குறித்தும் யோசனைகளை விவசாயிகளுக்கும், சுய உதவிக்குழுக்களுக்கும் வழங்கி வருகிறோம். அவர்கள் தயாரிக்கும் பொருள்கள் தரமாக இருக்கும் நிலையில், வேளாண் அறிவியல் நிலையம் சார்பில், அருமை தரச் சான்றிதழும் வழங்குகிறோம்.

பச்சை மிளகாய் பொடி தயாரிப்பது தொடர்பான தொழில்நுட்பத்தை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பயிற்சி மூலமாக அண்மையில் தெரிந்துகொண்டோம். மத்திய உணவு பதப்படுத்துதல் அமைச்சகம் சார்பில், புதுச்சேரி வேளாண் அறிவியல் நிலையத்தில், பச்சை மிளகாய் பொடி உள்ளிட்ட பல்வேறு மதிப்பு கூட்டு பொருள்கள் தயாரிக்க, தேவையான உலர்த்தி இயந்திரத்தை சுமார் ரூ. 1.25 லட்சம் செலவில் வாங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். பின்னர் பச்சை மிளகாய் பொடி தயாரிக்கும் தொழில்நுட்பம் குறித்து விவசாயிகள் மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளோம் என்றார்.

**நெற்பயிரைத் தாக்கும் பாக்டீரியா இலைக்கீற்று நோய்**

First Published : 25 Nov 2010 03:25:48 AM IST



பாக்டீரியா இலைக்கீற்று நோய்த் தாக்குதலுக்கு உள்ளான நெற்பயிர் .

திருவள்ளூர்: தற்போது பயிரிடப்பட்டுள்ள பிபிடி 5204, ஏடிடி 39 போன்ற நெல் ரகங்களில் பாக்டீரியா இலைக் கீற்று நோய்த் தாக்குதல் அதிகளவில் உள்ளது.

இத்தாக்குதலில் இருந்து பயிரைக் பாதுகாக்கும் முறை குறித்து திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத் தலைவர் கோ.வி.ராமசுப்பிரமணியம் தலைமையில், உதவிப் பேராசிரியர்கள் விவசாயிகளுக்கு வழிமுறைகளை விளக்கி வருகின்றனர்.

பாக்டீரியா இலைக் கீற்று நோய்த் தாக்குதலில் இருந்து பாதுகாப்பது குறித்து உதவிப் பேராசிரியர் சுமதி கூறும் போது, "நெல் பயிரை இலைக் கீற்று நோய்த் தாக்கும் போது சில அறிகுறிகளை வைத்து கண்டறியலாம். உதாரணமாக ஆரம்ப நிலையில் இலையின் சிறு நரம்புகளுக்கிடையில் நீர்க்கசிவான கீற்றுக்கள் தோன்றி பின்னர் இலை செம்பழுப்பு நிறமாக மாறும். இலைக் கீற்றுகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து இலைகள் முழுவதும் பரவி பின்னர் இலைகள் காய்ந்து விடும். இதுபோல் அறிகுறிகள் தென்பட்டால் அவற்றை கீழ்கண்ட முறைகளில் பாதுகாக்கலாம்.

பாதுகாப்பு முறைகள்:

நோய் தோன்றியுள்ள வயல்களில் இருந்து மற்ற வயல்களுக்கு நீர் பாய்ச்சக் கூடாது. நோய் தாக்கிய பயிரில் இருந்து விதைகளை சேகரிக்கக் கூடாது. மண் பரிசோதனை செய்து அதன்படி தழைச்சத்து உரமிட வேண்டும். இந்நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கோசைட் 200 கிராம் அல்லது 18 கிராம் ஸ்ட்ரெப்டோ சைக்கிளின் அல்லது ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட்டுடன் 500 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு கலந்து நோயின் தீவிரத்துக்கு ஏற்ப ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ தெளிக்க வேண்டும். இதுபோன்ற முறைகளை விவசாயிகள் கையாண்டால் நோயை கட்டுப்படுத்தி லாபமடையலாம்' என்றார்.

தினமலர்

**பசுந்தாள் உரச்செடி பயிரிட விவசாயிகளுக்கு ஆர்வம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,02:11 IST

பொங்கலூர்: பொங்கலூர் பகுதி விவசாயிகள், பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்தி, பயிர்கள் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்துவதால், மண் வளம் குறைவதுடன், விவசாயிகளுக்கு அதிக பொருட்செலவை ஏற்படுத்துகிறது. இதில் விளைவிக்கப்படும் செடிகளில் பூச்சித்தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. பூச்சிகளிடம் இருந்து பயிர்களை காப்பாற்ற, அதிக அளவில் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்க வேண்டியுள்ளது. இவை, நிலம், நீர், காற்றை மாசுபடுத்துகின்றன. மேலும், விவசாயிகளுக்கு வருமான இழப்பையும் ஏற்படுத்துகிறது. இதனால், விவசாயிகள் இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். இயற்கை உரம் தயாரிக்க நிலத்தில் சணப்பு விதைகளை விதைத்து விடுகின்றனர். இவை 45 நாட்களில் நன்றாக வளர்ச்சி அடைகிறது. சணப்பு செடிகள் நன்கு மட்கி, அதிக பொருள் செலவில்லாமல் இயற்கை உரமாக கிடைக்கிறது. நல்லகாளிபாளையம், பொல்லிக்காளிபாளையம், கோவில்பாளையம் பகுதிகளில் சணப்பு அதிக அளவில் பயிர் செய் யப்பட்டுள்ளது. உரம், மருந்து விலை அதிகரித்து வருவதால், விவசாயிகள் பசுந்தாள் உரச்செடியான சணப்பை பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர். விவசாயிகள் கூறுகையில், "சணப்பு செடிகள் தழைச்சத்தை நிலத்தில் அதிகளவில் நிலைநிறுத்துகிறது. இந்நிலத்தில் பயிர் செய்யப்படும் வாழை, நெல், வெங்காயம், மஞ்சள் ஆகியவை நன்கு செழித்து வளருவதுடன், பூச்சிநோய் தாக்குதல் மிகவும் குறைந்து காணப்படுகிறது. இவ்வாறு விளைவிக்கப்படும் காய்கள், பழங்கள் அதிக எடையுடனும், மிகவும் ருசியாகவும் இருக்கிறது. இவற்றுக்கு மார்க்கெட்டில் நல்ல விலை கிடைக்கிறது. உரங்களுக்கு செய்யப்படும் செலவும் மிச்சமாகிறது,' என்றனர்.

**பராமரிப்பின்றி வீணாகும் விதைப்பண்ணை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,02:27 IST

பொங்கலூர்: பொங்கலூர், தேவனம்பாளையத்தில் உள்ள அரசு விதைப்பண்ணை பராமரிப்பின்றி கிடப்பதால், பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத் துக்கள் வீணாகி வருகின்றன. அது, சமூக விரோதிகளின் கூடாரமாக மாறி வருகிறது. பண்ணையை பராமரிக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொங்கலூரில் 40 ஏக்கர் பரப்பில் அரசு விதைப்பண்ணை அமைந் துள்ளது. இப்பண்ணையில் நான்கு கிணறுகள் உள்ளன; ஒவ்வொன்றிலும் மோட்டார் பொருத்தப்பட் டுள்ளது. கிணறுகளில் தண்ணீர் இல்லாத சமயத்தில் பி.ஏ.பி., மெயின் கால்வாயில் இருந்து தோட்டத்துக்குள் தண்ணீர் வருமாறு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வரும் தண்ணீர் ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு, பின் மோட்டார் மூலம் தண்ணீர் உறிஞ்சப் பட்டு பாசனத்துக்கு பயன்படுத் தப்பட்டு வந்தது. இப்பண்ணையில் நூற்றுக்கணக் கான தென்னை

மரங்கள், மா, இலவம் உள்ளிட்ட மர வகைகள் உள்ளன. இவற்றை ஆண்டுதோறும் ஏலத்தில் விட்டதன் மூலம் நல்ல வருமானம் வந்து கொண்டிருந்தது. நல்ல நீர் வளம் இருந்தும் பராமரிக் கப்படாததால், பல மரங்கள் வறண்டு விட்டன. தற்போது 150 தென்னை மரங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. இவைகளும் வாடி காய்ப்புத்திறனை முற்றிலும் இழந்து விட்டன. அரசு அலுவலர்கள், அதிகாரிகள் தங்குவதற்கு 10 வீடுகள் மற்றும் அலுவலக வசதிக்கும், விதை சேமிப்புக்கும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் கான்கிரீட் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இக் கட்டடத்துக்குள், விதைகளை பிரித் தெடுக்க பல லட்சம் ரூபாய் மதிப் பில் இயந்திரங்கள் நிறுவப்பட் டுள்ளன. இந்த இயந்திரங்கள் பயன் படுத்த முடியாத அளவுக்கு துருப்பிடித்துள்ளன. தற்போது, இந்த வீடுகளில் யாரும் தங்குவதில்லை. அலுவலகங் களுக்கும் எந்த அதிகாரிகளும் வருவதில்லை. வீடுகள் புதர்மண்டியும், மாடியிலும், சுவர்களிலும் செடி, கொடிகள் முளைத்துள்ளன. இவற்றின் வேர்களால் கட்டடத்தின் உறுதித்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது. சுற்றிலும் போடப்பட்டுள்ள கம்பி வேலியும் போதிய பராமரிப் பின்றி சேதமடைந்துள்ளது. முன்பு இந்த விதைப்பண்ணையில் இருந்து, விதை உற்பத்தி செய் யப்பட்டு, விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வந்தது. இதன் மூலம் பல ஆயிரம் விவசாயிகள், குறைந்த விலையில் விதைகளை பெற்று பயனடைந்து வந்தனர்.
முன்னாள் முதல்வர் காமராசர், முன்னாள் அமைச்சர்கள் கக்கன், சுப் பிரமணியம் ஆகியோர் இப் பண்ணையை பார்வையிட்டு, விவசாயிகளுக்கு ஆற்றும் சேவையை பாராட்டினர். இவ்வளவு சிறப்பு பெற்ற இந்த விதைப்பண்ணை தற் போது முற்றிலும் புதர்களால் சூழப்பட்டு, பராமரிக்கப்படாமல் உள்ளது. இரவுநேரங்களில் குடிகாரர்கள் திறந்தவெளி பாராக பயன்படுத்துகின்றனர். மேலும், பல்வேறு சமூக விரோத செயல்கள் நடக்கவும் ஏதுவாகிறது. இப்பண்ணைக்கு அருகில் வசிப்பவர்கள், இங்கு வரும் சமூக விரோதிகளால், தங்களுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து விடுமோ என்ற அச்சத்துடன் வாழ்கின்றனர். கோடிக்கணக்கான ரூபாய் மதிப் புள்ள இப்பண்ணை பயன்படுத்தப்படாமல் இருப்பதால், அரசுக்கு ஆண்டுதோறும் பல ஆயிரம் ரூபாய் வருமான இழப்பு ஏற்படுகிறது. அரசு நிர்வகிக்க முடியாத பட்சத்தில், இப்பண்ணையை குத்தகைக்கு விட்டால், அரசுக்கு பல ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். தண்ணீருக்காக, விவசாயிகள் படாதபாடு பட்டு வரும் வேளையில், நல்ல தண்ணீர் வசதியுள்ள நிலத்தை அரசு வீணடித்து வருவது, விவசாயிகள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**"நமட்டோடு' பாக்டீரியாவை கட்டுப்படுத்த புதிய முறை!**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,01:40 IST

ஊட்டி: மலை காய்கறிகளை தாக்கும் "நமட்டோடு' என்ற பாக்டீரியாவை கட்டுப்படுத்த, பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல், கடுகு விவசாயத்தின் மூலம் உருவாகும் உரத்தை பயன்படுத்தும் புதிய முறையை, ஊட்டி விவசாயி ஒருவர் மேற்கொண்டுள்ளார்; காரட்,

உருளைக்கிழங்கு விவசாயத்தில் நல்ல பயன் கிடைக்கும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரம், விவசாயத்தை நம்பியே உள்ளது. கடந்த 1970ம் ஆண்டுக்கு பின் தேயிலைக்கு முக்கியத்துவம் அளித்ததால், இந்த விவசாயம் பிரதானமாக மாறியது. இருப்பினும், காரட், உருளைக்கிழங்கு உட்பட மலைகாய்கறி விவசாயமும், பல கிராமப்புற விவசாயிகளிடையே இன்றளவும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. 1999ம் ஆண்டுக்கு பின், தேயிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டதால், தேயிலைத் தோட்டங்கள் பல, காய்கறி விவசாயத்துக்காக மாற்றப்பட்டது. ஊட்டி, முத்தோரை பாலடா, நஞ்சநாடு, ஆடாசோலை, அணிக்கொரை, மரகல் உட்பட பல கிராமங்களில், பல சிரமங்களுக்கிடையே, சிறு விவசாயிகள் பலர், மலை காய்கறிகளை விளைவித்து வருகின்றனர். மலை காய்கறிகளை தாக்கும் நோய்களாலும், அடிக்கடி பெய்யும் மழையாலும், பள்ளதாக்கு பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதில், காரட், உருளைக்கிழங்கு ஆகிய மலை காய்கறிகளை தாக்கும் "நமட்டோடு' என்ற பாக்டீரியாவை ஒழிக்க முடியாமல், விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர்; இதைக் கட்டுப்படுத்த மருந்துகள் இருந்தாலும், சில மலை காய்கறிகளை, தோட்டத்தில் தொடர்ந்து உற்பத்தி செய்வதால், இந்த பாக்டீரியாவை கட்டுப்படுத்த முடியாத சூழல் உருவாகி உள்ளது. இந்நிலையில், இந்த பாக்டீரியாவை கட்டுப்படுத்த, கர்னாடக மாநிலத்தில் பயன்படுத்தப்படும் இயற்கை முறையை, ஊட்டியை சேர்ந்த ஒரு விவசாயி மேற்கொண்டுள்ளார். காரத் தன்மை கொண்ட கடுகு விவசாயத்தை, மலை காய்கறி தோட்டத்தில் விளைவித்து, டிராக்டர் மூலம் உழுது உரமாக மாற்றி, "நமட்டோடு' பாக்டீரியாவை கட்டுப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊட்டி மஞ்சனக்கொரை அருகே, இத்தகைய விவசாய முறையை மேற்கொண்டு வரும் விவசாயி ராமசந்திரன் கூறுகையில், ""நீலகிரியில் பிரதான மலை காய்கறிகளான காரட், உருளைக்கிழங்கு விவசாயத்தில், வேர் பகுதியை தாக்கும் "நமட்டோடு' பாக்டீரியா பெரும் சவாலாக உள்ளது; இதை, பூச்சிக்கொல்லி மூலம் பெரியளவில் கட்டுப்படுத்த முடியவில்லை. மைசூர் பகுதி விவசாயத்தில் மேற்கொள்ளும் முறையை, இங்கு முதன்முறையாக பயன்படுத்தி வருகிறேன். கடுகு விவசாயத்தை மேற்கொண்டு, அதில், மஞ்சள் நிற பூக்கள் மலர்ந்தவுடன், விவசாயத் தோட்டத்தை, டிராக்டர் மூலம் உழ வேண்டும். இதனால், கடுகு செடிகள் மண்ணுக்கு உரமாகவும், சிறந்த பூச்சி கொல்லியாகவும் மாறும். சில நாட்களுக்கு பின், மீண்டும் தோட்டத்தை உழுது, காரட் அல்லது உருளைக்கிழங்கு உட்பட விவசாயம் மேற்கொள்ள வேண்டும். மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய முறையை பின்பற்றுவதால், மண்ணின் தன்மை பெரியளவில் பாதிக்காது. அதே நேரம், மலை காய்கறிகளை தாக்கும் பாக்டீரியாக்களை கட்டுப்படுத்த முடியும். இந்த முயற்சி, ஊட்டியில் முதன்முறையாக மேற்கொண்டுள்ளோம். மைசூரில் உள்ள எனது தோட்டத்தில், இம்முயற்சிக்கு நல்ல பயன் கிடைத்துள்ளது," என்றார்.

**பட்டுப்புழு உற்பத்தியாளர் விழிப்புணர்வு கூட்டம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,02:01 IST

உடுமலை: "வறட்சியான பகுதிகளில், மல்பெரி மரங்களை நட்டு பராமரிப்பதன் மூலம் ஆண்டிற்கு சராசரியாக மூன்று முறை புழு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ளலாம்', என பட்டுப்புழு உற்பத்தியாளர்கள் விழிப்புணர்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. உடுமலை ஒன்றிய அலுவலக வளாகத்தில், பட்டு வளர்ச்சி துறை மற்றும் மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் சார்பில் மல்பெரி மரம் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். மத்திய பட்டு வாரிய சாம்ராஜ் நகர் மண்டல அலுவலக விஞ்ஞானி சந்திரசேகர் பேசியதாவது: வறட்சியான பகுதிகளிலும் மல்பெரி செடிகளுக்கு மாற்றாக மரங்களை பயிரிட்டு பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடலாம். ஏக்கருக்கு 700 மரங்கள் வரை நட்டு, மானாவாரி பயிர்கள் போன்று மழையை ஆதாரமாக கொண்டு இந்த மல்பெரி மரங்களை வளர்க்கலாம். பாசனத்திற்கான தண்ணீர் இருக்கும் பகுதிகளிலும் மல்பெரி மரங்களை வளர்க்கலாம். மானாவாரியாக வளர்க்கப்படும் மரங்களில் 10 கிலோ இலையும், பாசனத்தின் அடிப்படையில் பயிரிடப்படும் மரங்களிலிருந்து 20 கிலோ வரையும் இலைகளை அறுவடை செய்யலாம். மூன்று முதல் ஐந்து முறை புழு வளர்ப்பு பணிகளை மேற்கொள்ளலாம். மல்பெரி மரங்களிலிருந்து பறிக்கப்படும் இலைகளை கொண்டு புழுக்களை வளர்ப்பதன் மூலம் தரமான கூடுகளை அறுவடை செய்யலாம். மரம் வளர்ப்பு முறையால் வறட்சியான பகுதிகளிலும் விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு தொழிலை மேற்கொண்டு 23 ஆயிரம் வரை வருமானம் ஈட்டலாம்' என்றார். மத்திய பட்டு வாரிய விஞ்ஞானி செல்வராஜ், புனிதவதி உட்பட பலர் பேசினர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் பங்கேற்றனர்.

**விளாத்திகுளம் பகுதியில் மிளகாய் நாற்று நடும் பணி தீவிரம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,01:49 IST

விளாத்திகுளம் : விளாத்திகுளம் பகுதியில் இறவை பாசன நிலங்களில் மிளகாய் நாற்று நடும் பணி தீவிரமாக நடக்கிறது. தமிழகத்தின் தென்பகுதியில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பகுதியில் தான் மிளகாய் வத்தல் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. விளாத்திகுளம் தாலுகாவில் மானாவாரி மற்றும் பாசன நிலங்களில் மிளகாய் வத்தல் மகசூல் செய்யப்படுகிறது. புதூர், நாகலாபுரம், சூரங்குடி, சிவஞானபுரம், பிள்ளையார்நத்தம், காடல்குடி உட்பட பல்வேறு பகுதிகளில் மானாவாரி நிலங்களில் சுமார் 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய் வத்தல் மகசூல் செய்யப்படுகிறது. மேலும் வைப்பாற்று படுகையில் உள்ள ஆற்றங்கரை, என்.வேடப்பட்டி, ஜமீன் செங்கல்படை, கோட்டநத்தம், மந்திக்குளம், மார்த்தாண்டம்பட்டி, பூசனூர், எம்.அரசன்குளம், வி.வேடப்பட்டி, விருசம்பட்டி, புளியங்குளம், கோட்டை மேடு, குளத்தூர் உட்பட பல இடங்களில் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பாசன நிலங்களில் மிளகாய் வத்தல் மகசூல் செய்யப்படுகிறது. மானாவாரி நிலங்களில் மிளகாய் வத்தல் விதை கடந்த மாதமே விதைக்கப்பட்டு முளைத்துள்ளது.

ஆனால் போதிய மழை பெய்யாததால் சரிவர முளைக்கவில்லை. பாசனநிலங்களில் மிளகாய் நாற்று நடும் பணி கடந்த சில வாரங்களுக்கு முன்பே துவங்கியது. ஆனால் அப்போது போதிய மழை பெய்யாததால் பணியில் சுனக்கம் ஏற்பட்டது. எனவே மழைக்காக விவசாயிகள் காத்திருந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக விளாத்திகுளம் பகுதியில் பலத்த மழை பெய்தது. இதனால் மிளகாய் நாற்று நடும் பணியில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். இந்நிலையில் மிளகாய் நாற்றுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பலர் வெளியூர்களுக்கு சென்று பாத்தி ரூ.300 முதல் ரூ.500 வரை விலைக்கு வாங்கி நாற்றுகள் நடுகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக மிளகாய் சாகுபடி பெரிதும் பாதிக்கும் அள வுக்கு மழை அதிகளவில் பெய்வதும் அல்லது போதுமான மழை பெய்யாமல் இருப்பதுமாக உள்ளது. சில நேரங்களில் காலம் கடந்து மழை பெய்வதால் மிளகாய் சாகுபடி விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இந்த ஆண்டாவது மிள காய் சாகுபடி கை கொடுக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.

**வேளாண் அறிவியல் நிலையத்தில்நெட்டை ரக தென்னம்கன்று விற்பனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,02:48 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மேற்கு கடற்கரை நெட்டை ரக தென்னங்கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:மத்திய தென்னை ஆராய்ச்சி நிலையம், கேரளாவிலிருந்து வெளியிடப்பட்ட மேற்கு கடற்கரை தென்னங்கன்றுகள் வறட்சியை தாங்கி வளரக்கூடியவை. கொப்பரைக்கு மிகவும் உகந்த இத்தென்னங்காய்கள் எண்ணெய் சதவீதம் 68 முதல் 71 சதவீதம் வரை உள்ளது. ஒரு டன் கொப்பரை எடுக்க 5,000 முதல் 7,000 வரையிலான காய்கள் தேவைப்படுகிறது.இந்த ரக தென்னங்கன்றுகளை தங்கள் பண்ணையில் நடவு செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள், பண்ணையாளர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தை அணுகலாம். ஆறு முதல் எட்டு மாதம் வரை வளர்ச்சியடைந்த தென்னங்கன்றுகள் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து 04286-266345, 266244 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கிணறுகளில் நீர்மட்டம் உயர்வுநெல் நடவுப்பணி மும்முரம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,03:13 IST

தாராபுரம்: கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிப்பால் விவசாயிகள் நம்பிக்கையுடன் நடவுப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.தாராபுரம், குண்டடம், மூலனூர், வெள்ளக்கோவில் யூனியன் பகுதியில், அமராவதி ஆற்றையும், கிணறுகளையும் நம்பி பாசனம் நடக்கிறது. அமராவதி அணை மூலம்,

பழைய, புது ஆயக்கட்டு பாசனப் பகுதியில் 57 ஆயிரத்து 525 ஏக்கர் விவசாய விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. 21 கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் 245 கிராமங்களின் குடிநீர்த் தேவை பூர்த்தியாகிறது. சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து, அமராவதி அணை திறப்பால் மட்டுமே ஒரு போக சாகுபடி நடந்தது.

சமீபத்தில் 10 நாட்களாக பெய்த தொடர்மழையால் அமராவதி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கிளை வாய்க்காலில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது.விவசாயக் கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் அதிகரித்துள்ளது. ஆறு, வாய்க்கால் ஆகியவற்றில் செல்லும் தண்ணீரைக் கொண்டு விவசாயிகள் நெல், மக்காச்சோளம், கரும்பு உள்பட பல்வேறு வகையான தானியங்களை பயிரிடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக உள்ளனர். தாராபுரம், தளவாய்ப்பட்டணம், அலங்கியம், கோவிந்தாபுரம், செலாம்பாளையம், கொளத்துப்பாளையம், மதுக்கம்பாளையம், ஆத்துக்கால்புதூர், பெரமியம் உட்பட பல்வேறு கிராமங்களிலும், விவசாயிகள் நடவுப் பணியை தீவிரப்படுத்தியுள்ளதால், கூலியாட்கள்கிடைக்காமல், வெளியூரிலிருந்து ஆட்களை அழைத்து வருகின்றனர்.

**துல்லியல் பண்ணை அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 25,2010,00:55 IST

பள்ளிப்பட்டு : துல்லியல் பண்ணை அமைக்க, விவசாயிகள் முன்வர வேண்டும் என, பள்ளிப்பட்டில் நடந்த முன்பருவ பயிற்சி மற்றும் கருத்து கண்காட்சி நிகழ்ச்சியில், தோட்டக்கலை துணை இயக்குனர் ரஞ்சன்பால் கேட்டுக் கொண்டார்.
பள்ளிப்பட்டு அடுத்த ராமசமுத்திரம் கிராமத்தில் தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை சார்பில், முன்பருவ பயிற்சி மற்றும் கருத்து கண்காட்சி நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு திருவள்ளூர் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் ரஞ்சன்பால் தலைமை வகித்தார்.

அவர் பேசியதாவது: விவசாயிகள் துல்லியல் பண்ணை அமைக்க முன்வர வேண்டும். அவர்களுக்கு அரசு சார்பில், ஒரு எக்டருக்கு 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரம் மானியமாக அளிக்கப்படும். தற்போது பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் 16 எக்டர் நிலத்தில் துல்லியல் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு விரைவில் உரங்கள் அளிக்கப்படும். சப்போட்டா, நெல்லி, மா மரம் போன்ற பழ வகை கன்றுகள் தயாராக உள்ளது. அவற்றை விவசாயிகள் பெற்று, ஹைடெக் (நெருக்க நடவு) முறையில் நடவு செய்து பயனடையலாம். இவ்வாறு ரஞ்சன்பால் பேசினார். நிகழ்ச்சியில் ராமசமுத்திரம், புண்ணியம், கீச்சலம், கோணசமுத்திரம், பள்ளிப்பட்டு மற்றும் சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த, ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். வீரிய

ரக மிளகாய் விதைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. உதவி வேளாண்மை அலுவலர் நாராயணசாமி நன்றி கூறினார்.

**தமிழகத்துக்கு வெங்காயம் வரத்து அதிகரிப்பு; விலை திடீர் சரிவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 24,2010,02:56 IST

சேலம்: மஹாராஷ்டிரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வரும் பெரிய வெங்காயத்தின் வரத்து அதிகரித்துள்ளதால் விலையில் திடீர் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்துக்கு தேவையான பெரிய வெங்காயம் மஹாராஷ்டிரா மாநிலம் உப்பிலி, புவனா, பூனே, கர்நாடகா மாநிலம் சல்லிக்கரை, பெல்லாரி, மைசூரின் குண்டல்பேட்டை, நகரம், தர்க்கனப்பள்ளி ஆகிய பகுதிகளில் இருந்து விற்பனைக்கு வருகிறது. கடந்த வாரம் இப்பகுதிகளில் இருந்து தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டு இருந்த பெரிய வெங்காயத்தின் வரத்தில் கடும் சரிவு ஏற்பட்டது. இதன் எதிரொலியாக தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு பெரிய வெங்காயம் கிலோ அதிகபட்சமாக 45 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் வெங்காயம் அதிக விளையும் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் குடோன்களில் ஸ்டாக் வைக்கப்பட்டு இருந்த வெங்காயம் அழுகத் துவங்கியது.

இருப்பு வைத்திருந்த வியாபாரிகள் வெங்காயத்தை விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர். இதன் கராணமாக தமிழகத்துக்கு அதிக அளவில் வெங்காயம் மஹாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வருகிறது. தற்போது வரும் பெரிய வெங்காயம் அதிக அளவில் வந்த போதும் அதிக அளவில் அழுகிய நிலையில் தான் வருகின்றனர். இதை வாங்கும் சிறிய வியாபாரிகள் அதை தரம் வாரியாக பிரித்து விற்பனை செய்கின்றனர். மேலும் தற்போது நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வெங்காயம் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. முதல் ரக வெங்காயம் விற்பனைக்கு வரவில்லை. வியாபாரிகள் எதிர்பார்த்ததை விட அதிக அளவில் வெங்காயம் விற்பனைக்கு வருவதால் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் வரை கிலோ 38 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் தற்போது கிலோ 20 ரூபாய் முதல் 32 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. பெரிய வெங்காயத்தின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ள போதிலும் சிறிய வெங்காயத்தின் விலையில் எவ்வித மாற்றம் இன்றி கிலோ 23 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**ஸ்டார் மோட்டார் விலை அதிகம் விவசாயிகள் கண்ணீர்**

திருப்பூர்: புதிதாக இலவச மின் இணைப்பு பெற, ஸ்டார் முத்திரையுள்ள மோட் டார் வாங்க அதிக பணம் செலவிட வேண்டியுள் ளது; அதற்கு பதிலாக, ஐ.எஸ்.ஐ., மோட்டார் அல்லது விவசாயிகளின் விருப்பத்துக்கேற்ப மோட்டார் வாங்க அனுமதியளிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. இலவச மின் இணைப்பு பெறுவதற்கு காத்திருக்கும் விவசாயிகளில்

இரண்டு லட்சம் பேருக்கு இணைப்பு வழங்க, தமிழக அரசு அனுமதித்துள்ளது. புதிய இணைப்பு பெறுவதற் கான பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். விண்ணப்பத்துடன் நான்கு அல்லது ஐந்து ஸ்டார் உள்ள மோட்டார் வாங்கியதற்கான பில் இணைக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அத்தகைய மோட்டார் வாங்க விவசாயிகள் கண்ணீர் சிந்துகின்றனர். விவசாயிகள் கூறியதாவது: இலவச மின் இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பத்துடன், நான்கு அல்லது ஐந்து ஸ்டார் முத்திரையுள்ள மின்மோட்டார் வாங்கியதற்கான பில் இணைக்க வேண்டுமென மின்வாரியம் கூறுகிறது. அத்தகைய மோட்டார் வாங்க, அதிக தொகை செலவிட வேண்டும். அந்த ரக மோட்டார் வாங்க ஐந்து நிறுவனங்களே உள்ளன. ஒரே நேரத்தில் அதிகமான விவசாயிகள் வாங்குவதால், விலை கடுமையாக உயர்ந்துள் ளது. ஒரு மோட்டார் 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் என விற்கப்பட் டது; தற்போது 55 ஆயிரம் ரூபாய் வரை விலை சொல்கின்றனர். ஐ.எஸ்.ஐ., மோட்டார் என்று அறிவித்தால் சிரமம் இருக்காது. அதிக கம்பெனிகள் உள்ளன; விலையும் உயராது. டிச., 3க்குள் விண்ணப் பம் அளிக்க வேண்டும். அதற்குள் இதர சான்றி தழ், மோட்டார் என 70 ஆயிரம் வரை செலவு செய்ய வேண்டியுள்ளது. குறுகிய காலத்தில் பெரிய தொகையை, உடனடியாக செலவிட முடியாது. விவசாயிகளின் விருப்பத்துக்கு ஏற்ப மோட்டார் வாங்க அரசு உத்தரவிட வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**நெற்பயிரில் செந்தாளை நோய் பாதுகாப்பு ஆலோசனைகள்**

காளையார்கோவில் : காளையார்கோவில் ஒன்றியத்தில் நெற்பயிரில் செந்தாளை, புகையான், இலைச்சுருட்டு நோய் தாக்கியுள்ளதால், மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.இங்கு, பெய்து வரும் மழையினால் ஒன்றிய அளவில் கண்மாய் , குளங்களில் நீர் பெருகியுள்ளது. கண்மாய் நீரை நம்பி இங்கு, 10,500 எக்டேர் நில விவசாயிகள் நெல் சாகுபடி செய்துள்ளனர். தற்போது, நெற்பயிர் விளைந்துவரும் நிலையில், செந்தாளை நோய் தாக்கி இலைகள் செம்பழுப்பாக மாறி வருகிறது. புகையான் நோயால் இலைகள் வெளுத்துள்ளன. இலை சுருட்டு நோய் தாக்கமும் அதிகரித்துள்ளன. இதனால், நெல் மகசூல் பாதிக்கும் என விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இது குறித்து விவசாயத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ஜைனுல்பவுசியாராணி கூறுகையில், "" நெற் பயிரில் ஜிங்க் சத்து குறைவால், செந்தாளை நோய் தாக்குகிறது. இவை தாக்கிய நிலத்தில் தண்ணீரை வெளியேற்ற வேண்டும். அதில், ஏக்கருக்கு 5 கிலோ ஜிங்க் சல்பேட் உரத்தை மணலுடன் கலந்து இடவேண்டும். புகையான் நோய் தாக்கினால், ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் 400 மில்லி நுவான் மருந்து கலந்து தெளிக்கவும். இலைச்சுருட்டு நோய்க்கு, 200 லிட்டர் தண்ணீரில், பிரிமியன் சூப்பர் 400 மில்லி மருந்தை கலந்து தெளிக்கவும். விவசாய விரிவாக்க அலுவலகத்தில், ஜிப்சம், ஜிங் சல்பேட், வசம்பு, பிரிமியன் சூப்பர், அசார் டிராக்டின் மருந்துகள், போதுமான அளவில் இருப்பு உள்ளன. இதை 50 சதவீத மானியத்தில் பெறலாம்,'' என்றார்.

## பருத்தி ஏற்றுமதியை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் டாக்டர் ராமதாஸ் பேட்டி

காங்கயம்,நவ.25–

பருத்தி ஏற்றுமதியை மத்திய அரசு தடை செய்ய வேண்டும் என்று, பா.ம.க. நிறுவன தலைவர் டாக்டர் ராமதாஸ் கூறினார்.

ஈரோடு–பழனி ரெயில் திட்டத்தால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வுரிமை மாநாடு காங்கயம் சீரணி அரங்கில் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்காக வந்த பா.ம.க. நிறுவன தலைவர் டாக்டர் ராமதாஸ் காங்கயம் சுற்றுலா பயணியர் விடுதியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

கூட்டணி கிடையாது

நாங்கள் தற்போது எந்த கட்சியுடனும் கூட்டணி கிடையாது. கூட்டணி குறித்து ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் முடிவு செய்து இறுதி செய்யப்படும். தற்போது நூல் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது. பருத்தி ஏற்றுமதியை மத்திய அரசு தடை செய்ய வேண்டும்.

ஆன்லைன் வர்த்தகத்தில் இருந்து பருத்தி வர்த்தகத்தை நீக்க வேண்டும். சிறப்பு மண்டல பொருளாதாரம், வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் எடுக்கப்படும் நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு தற்போதைய சந்தை மதிப்பீட்டின்படி இழப்பீடு வழங்க வேண்டும்.

வறுமை அதிகரிப்பு

ஸ்பெக்ட்ரம் அலைவரிசை விவகாரத்தை ஜெ.பி.சி.க்கு கொண்டு செல்வதால் எந்த பயனும் இல்லை. எனவே இந்த விவகாரத்துக்காக நாங்கள் எந்த போராட்டமும் நடத்தப்போவது இல்லை. மதுவால் வறுமை 2 மடங்கு அதிகரித்துள்ளது. எனவே மதுக்கடைகளை மூட வேண்டும்.

விவசாயிகளுக்கு டிசம்பர் மாதத்துக்குள் 2 லட்சம் மின்மோட்டார் இணைப்பு வழங்கப்படும் என்கிறார்கள். இதற்கிடையே மின்சார வாரியம் ஒரு புதிய அறிவிப்பை

வெளியிட்டு இருப்பது சரியல்ல. முதலில் மனு செய்பவர்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும்.

அனுமதிக்க வேண்டும்

4 நட்சத்திர மின் மோட்டார்களைத்தான் விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்கிறார்கள். இதனால் கோவை, திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களில் ஐ.எஸ்.ஐ. முத்திரையுள்ள மோட்டார் தயாரிக்கும் சிறு, நடுத்தர தொழில்முனைவோர் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே தரமுள்ள, ஐ.எஸ்.ஐ. முத்திரையுள்ள மின் மோட்டார்களையே விவசாயிகள் பயன்படுத்த அரசு அனுமதிக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார்.

## ஏப்ரல் – அக்டோபர் மாத காலத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 3.18 லட்சம் டன்னாக உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் (ஏப்ரல் – அக்டோபர்) நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி, சென்ற நிதி ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 6 சதவீதம் (2.99 லட்சம் டன்) அதிகரித்து 3.18 லட்சம் டன்னாக உயர்ந்தள்ளது.

இந்தியாவின் நறுமண பொருள்களுக்கு குறிப்பாக இஞ்சி மற்றும் மஞ்சளுக்கு வெளிநாடுகளில் தேவைப்பாடு மிகவும் அதிகரித்து வருகிறது. மதிப்பின் அடிப்படையில் இஞ்சி ஏற்றுமதிஇரண்டு மடங்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி

கடந்த 2008–ஆம் ஆண்டில், சர்வதேச அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளில் நறுமண பொருள்களுக்கான தேவைப்பாடு குறைந்தது. இதனால், அந்நாடுகள் நறுமண பொருள்கள் இறக்குமதியை குறைத்துக் கொண்டன. தற்போது மேற்கண்ட நாடுகளில்

*பொருளாதார நிலைமை சீரடைந்து வருவதால், இந்நாடுகளின் இறக்குமதி உயர்ந்து வருகிறது. குறிப்பாக, நறுமண பொருள்களை அதிக அளவில் இறக்குமதி செய்ய தொடங்கியுள்ளன.*

*மேலும், நம் நாட்டின் நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனை உறுதிபடுத்துகின்ற வகையில், நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், அளவின் அடிப்படையில் ஏற்றுமதி 6 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், டாலர் மதிப்பு அடிப்படையில் 19 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது, 67.50 கோடி டாலரிலிருந்து 80.50 கோடி டாலராக உயர்ந்துள்ளது.*

*அதேசமயம், ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது 13 சதவீதம் மட்டுமே வளர்ச்சி அடைந்து ரூ.3,260 கோடியிலிருந்து ரூ.3,685 கோடியாக உயர்ந்துள்ளது. சென்ற நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ஒரு அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு சராசரியாக ரூ.48.20–ஆக இருந்தது. இது, நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூ.45.70–ஆக குறைந்துள்ளது. அதாவது, டாலர் மதிப்பு சரிவடைந்து, ரூபாயின் வெளிமதிப்பு உயர்ந்துள்ளது. இது, ஏற்றுமதியாளர்களுக்கு சாதகமான அம்சமாகும்.*

*இலக்கு*

*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில் அளவின் அடிப்படையில் 4.65 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய நறுமண பொருள்கள் வாரியம் இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதி இதில் 68 சதவீதம் என்பது கவனிக்கத்தக்கது.*

*டாலர் மதிப்பு அடிப்படையிலும் ஏற்றுமதி இலக்கில் (112.50 கோடி டாலர்) 72 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ரூபாய் மதிப்பு அடிப்படையில் ரூ.5,100 கோடி ஏற்றுமதி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூபாய் மதிப்பு அடிப்படையிலும் இதில் 72 சதவீத அளவிற்கு ஏற்றுமதி நடைபெற்றுள்ளது.*

*அன்னிய செலாவணி*

*ஆக, நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவு மற்றும் டாலர் மதிப்பு, ரூபாய் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் விஞ்சும் என நறுமண பொருள்கள் வாரியத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஏற்றுமதி அதிகரிப்பதால், நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு உயர்ந்து, பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்படும்.*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட காலத்தில், மிளகாய், பெருஞ்சீரகம் மற்றும் பூண்டு ஆகியவற்றின் ஏற்றுமதி அளவு மற்றும் மதிப்பு அடிப்படையில் வியக்கத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. கறி மசாலா, நறுமண எண்ணெய், ஓலியோரெசின் உள்ளிட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதியிலும் விறுவிறுப்பு*

ஏற்பட்டுள்ளது. அதேசமயம், வெந்தயம், ஏலக்காய் போன்ற சில பொருள்களின் ஏற்றுமதி குறைந்துள்ளது.

மிளகாய்

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூ.865 கோடி மதிப்பிற்கு மிளகாய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, மொத்த ஏற்றுமதியில் 23 சதவீதம் என்பது கவனிக்கத்தக்கது. ஆக, நறுமண பொருள்கள் ஏற்றுமதியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு மிளகாய்தான் அடிப்படையாக திகழ்ந்துள்ளது. இதே காலத்தில், ஏற்றுமதியான நறுமண எண்ணெய் மற்றும் ஒலியோரெசின் ஆகியவற்றின் மதிப்பு ரூ.827 கோடியாகும். நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் ரூ.187 கோடி மதிப்பிற்கு 10,500 டன் மிளகு ஏற்றுமதி ஆகியுள்ளது.இந்நிலையில், சென்ற அக்டோபர் மாதத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 2 சதவீதம் சரிவடைந்து 46,000 டன்னிலிருந்து 45,000 டன்னாக குறைந்துள்ளது. இதே மாதத்தில் ரூபாய் மதிப்பு அடிப்படையில் இது ரூ.585 கோடியிலிருந்து ரூ.590 கோடியாக உயர்ந்துள்ளது.

## காய்கறி விலை கடும் உயர்வு சாம்பாரில் காய்களை அள்ளிப் போட இயலாமல் இல்லத்தரசிகள் அதிருப்தி



எஸ் சுஜாதா கோயம்புத்தூர்

காய்கறிகள் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்துள்ளது. இதனால் காய்கறிகளை அள்ளிப் போட்டு குழம்பும், சாம்பாரும் வைக்க இயலாமல் இல்லத்தரசிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். நான்கு இட்லிக்கு நான்கு லிட்டர் சாம்பார் ஊற்றி சாப்பிடும் போஜனப் பிரியர்களும் இதனால் அளவற்ற வருத்தம் அடைந்துள்ளனர்.

பெரிய வெங்காயம்

கோயம்புத்தூரில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை, சில்லரை விற்பனை

*நிலையங்களில் ரூ.32 என்ற அளவிலும், மொத்த விற்பனை மையங்களில் ரூ.28 என்ற அளவிலும் உள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.20 என்ற அளவில்தான் இருந்தது. வீடுகளில் வெங்காயம் இல்லாமல் சமையலே இல்லை என்ற நிலையில், அன்றாடம் அதிகம் பயன்படுத்தப்படும் இதர முக்கிய காய்கறிகளின் விலை சராசரியாக 20 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*கனமழை*

*கோவையில் முன்னணி சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர் இது குறித்து கூறுகையில், "பொதுவாக ஒரு காலண்டர் ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில், கனமழை காரணமாக, காய்கறிகள் விலை உயர்ந்து விடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறான வகையில் சில காய்களின் விலை 100 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த 2008–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, விலை ஒரு கிலோவுக்கு ரூ.3 உயர்ந்துள்ளது" என்று தெரிவித்தார்.*

*கடந்த ஓராண்டில் பெரிய வெங்காயம் விலை 60 சதவீதம் உயர்ந்துள்ளது. சில்லரை விற்பனையில் ஒரு கிலோ கத்தரிக்காய் ரூ.52–ஆக விண்ணைத் தொடும் அளவிற்கு சென்று விட்டது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.31–ஆக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. முருங்கைக்காய் மற்றும் கறிவேப்பிலை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.60 என்ற அளவை எட்டியுள்ளது. இது, சென்ற ஆண்டில் முறையே ரூ.30 மற்றும் ரூ.10 என்ற அளவில்தான் இருந்தது.*

*தக்காளி–வெண்டைக்காய்*

*தக்காளி, வெண்டைக்காய் போன்ற இதர வழக்கமான காய்கறிகள் கிலோ ஒன்றுக்கு ரூ.5 உயர்ந்துள்ளது. இந்நிலையில் கனமழை காரணமாக பல சந்தைகளில் கீரை வரத்து, கடந்த 15 தினங்களாக அறவே நின்று போயுள்ளது. தமிழகத்தில் பல முக்கியமான காய்கறிகள் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஒசூர் ஆகிய இடங்களில் பயிர் செய்யப்படுகின்றன. ஆந்திர மாநிலம் மதனபள்ளி இந்தியாவின் மிக முக்கியமான காய்கறிச் சந்தைகளில் ஒன்றாக உள்ளது.*

*பெரிய வெங்காயம் விலை உயர்ந்த கையோடு சின்ன வெங்காயத்தின் விலையும் உயர்வதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. தேவை உயரத் தொடங்கியுள்ளதே இதற்கு காரணமாகும். ஒரு கிலோ சின்ன வெங்காயத்தின் விலை, சென்ற ஆண்டைப் போலவே தற்போதும் ரூ.34 என்ற அளவில் உள்ளது. இந்த நிலை நீடிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதே சமயம், சென்ற மாதத்தில் இதன் விலை ரூ.18–22 என்ற அளவில்தான் இருந்தது.*

## தொடர்மழை காரணமாக கோவையில் கொத்தமல்லி, புதினா விலை உயர்வு

கோவை, நவ.25–

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக கோவை மார்க்கெட்டுகளில் விற்பனையாகும் கொத்தமல்லி, புதினா, கருவேப்பிலை ஆகியவற்றின் விலை ‘கிடுகிடு’ வென உயர்ந்து உள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகள்

கோவையில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து காய்கறிகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக கொத்தமல்லி, கருவேப்பிலை, புதினா ஆகியவை ஓசூர், சூளகிரி, ராயக்கோட்டை மற்றும் உள்ளூர் பகுதிகளான செஞ்சேரிமலை, நெகமம் மற்றும் சுல்தான்பேட்டை ஆகிய பகுதிகளில் இருந்து நாள்தோறும் 6 முதல் 8 டன்கள் வரைகொண்டுவரப்படுகிறது.

தற்போது தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் கொத்தமல்லி செடிகள் அழுகி சேதம் அடைந்து விட்டன. இதனால் அதன் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக கோவையில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு இவற்றின் வரத்து பாதியாக குறைந்துள்ளது. கோவை தியாகி குமரன் மார்க்கெடில் நேற்று விற்பனையான காய்கறி விலை விவரம் வருமாறு:–

வெங்காய வரத்து அதிகரிப்பு

ஒரு கிலோ கேரட் ரூ.25 முதல் ரூ.30–க்கும், முள்ளங்கி ரூ.16–க்கும், இஞ்சி ரூ.30 முதல் ரூ.40–க்கும், வெண்டைக்காய் ரூ.16–க்கும், முருங்கைகாய் ரூ.50–க்கும் விற்பனையானது. மற்ற காய்கறிகளை பொறுத்தவரை விலையில் எந்த மாற்றமும் இல்லை. கடந்த சில நாட்களாக ஒரு கிலோ ரூ.45 வரை விற்பனையான பெரிய வெங்காயத்தின் விலை சற்று குறைந்துள்ளது. நேற்றைய நிலையில் ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ. 30 முதல் ரூ.35 வரை விற்பனையானது.

தற்போது புனே, நாசிக் மற்றும் ஹாசன் ஆகிய பகுதிகளில் இருந்து பெரிய வெங்காயம் வரத்து தொடங்கி உள்ளது. இதனால் வெங்காயத்தின் விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக தியாகி குமரன் மார்க்கெட் சங்க நிர்வாகி கார்த்திகேயன் தெரிவித்தார்.

கொத்தமல்லி–புதினா

வரத்து பாதியாக குறைந்துவிட்டதால், ஒரு கிலோ கொத்த மல்லி ரூ.40–க்கு விற்பனையாகிறது. ஒரு கட்டு புதினா ரூ.8–க்கு விற்பனையானது ரூ.18 ஆக உயர்ந்துள்ளது. ரூ.6 விற்பனையான கருவேப்பிலை ரூ.10 உயர்ந்து ரூ.16–க்கு விற்பனையாகிறது. மார்க்கெட்டில் காய்கறிகளை வாங்கிய பின்னர் புதினா, கொத்தமல்லி மற்றும் கருவேப்பிலை ஆகியவற்றை மக்கள் வாங்கி செல்வார்கள். கேட்டதை விட கொசுறாக மல்லி தழையை கூடுதலால கொடுப்பார்கள். விலை உயர்ந்து உள்ளதால் கொசுறு கொடுப்பதை நிறுத்தி விட்டனர். இதன் காரணமாக

பொதுமக்கள் காய்கறியை விட மல்லி தழையை அதிக விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர்.

# வேளாண்மை செய்திகள்



ஏற்றுமதி வாய்ப்பு, உள்நாட்டு தேவை காரணமாக

# மக்காச்சோளத்தை உடனே சாகுபடி செய்யுங்கள்

## விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை

கோவை, நவ.25-

ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் அதிகரித்து வரும் உள்நாட்டு தேவை காரணமாக மக்காச்சோளத்தை உடனே சாகுபடி செய்யுங்கள் என்று விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

**மக்காச்சோளம்**

உலகின் முக்கிய தானியப் பயிரான மக்காச்சோளத்தின் விலை சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தையில் ஏற்றத்தை கண்டு உள்ளது. உற்பத்தி குறைவு, குறைவான இருப்பு, அதிகரித்து உள்ள தீவன பயன்பாடு மற்றும் உணவின் தேவை ஆகியவை மக்காச்சோளத்தின் தேவையை அதிகரித்து உள்ளது.

நமது நாடு மக்காச்சோள உற்பத்தியில் 5-ம் இடத்தை வகிக்கிறது. ஒவ்வொரு வர்த்தக ஆண்டிலும் சுமார் 1 மில்லியன் முதல் 3 மில்லியன் டன்கள் வரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. நல்ல பருவமழை மற்றும் நல்ல விதை காரணமாக இந்த ஆண்டில் உற்பத்தி 14 சதவீதம் அதிகரித்து 19 மில்லியன் டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு ஆண்டில் மக்காச்சோளத்தின் ஆதார விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.840 ஆக இருந்ததை மத்திய அரசு ரூ.40 உயர்த்தி ரூ.880 ஆக அறிவித்து உள்ளது. வர்த்தக தகவல்படி நடப்பு ஆண்டில் இந்தியாவில் இருந்து 2.5 மில்லியன் டன் மக்காச்சோளம் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. மேலும் ஏற்றுமதி 2.7 மில்லியன் டன்னாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கோழித் தீவனம்**

தமிழ்நாட்டை பொறுத்தவரை மக்காச்சோளம் சுமார் 2 லட்சம் எக்டேரில் பயிரிடப்படுகிறது. மக்காசோளம் பயிரிட கார்த்திகை பட்டமும் ஒரு முக்கிய பருவமாகும். தமிழ்நாட்டில் உள்ள சந்தைகளில் மக்காச்சோள வரத்து டிசம்பர் மாதம் தொடங்கி ஏப்ரல் மாதம் வரை இருக்கும். வர்த்தக தகவல் படி தமிழகத்தில் கோழித் தீவனத்துக்காக மக்காச்சோளத்தின் தேவை 8 லட்சம் டன்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது தரமான மக்காச்சோளத்தின் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூ.925 முதல் ரூ.975 ஆக உள்ளது. இதை கருத்தில் கொண்டு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத்திட்டத்தின் உள்நாட்டு ஏற்றுமதி சந்தை தகவல் மையம் விலை ஆய்வை மேற்கொண்டது. இதன்படி அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை மேற்கண்ட விலையே நிலவும் என்றும் அதன் பின்னர் விலை ஏற வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளது. மேலும் ஏற்றுமதி வாய்ப்பு, அதிகரித்துவரும் உள்நாட்டு தேவை ஆகியவை மக்காச்சோளத்தின் விலையை சீராக வைத்திருக்கும் என்று கணித்துள்ளது.

எனவே மக்காச்சோளத்தை உடனே சாகுபடி செய்யலாம் என்று விவசாயிகளுக்கு வேளாண் பல்கலைக்கழகம் ஆலோசனை வழங்கி உள்ளது.

விவசாயிகளுக்கு

# அதிக லாபம் தரும் கிராம்பு துளசி சாகுபடி

துளசி வகைகளில் கிளாசிமம் என்ற கிராம்பு துளசி வணிக ரீதியாக அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தவகை துளசியில் இலைகளில் மிதைல் யூஜினால் என்னும் விலை உயர்ந்த மருந்துப்பொருள் 60 முதல் 65 சதவீதம் உள்ளது. இவை கிராம்பின் மணத்தை பெற்று இருப்பதால் இதனை கிராம்பு துளசி என்று அழைக்கப்படுகிறது. துளசி வகைகளிலேயே அதிக அடர்த்தியுடன் வளரும் தன்மை கொண்டது இதுதான்.



**கிராம்பு துளசி**

கிராம்பு துளசி வணிக பயனுக்காக காஷ்மீர், உத்திரபிரதேசம், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது. இந்த வகை துளசியை விவசாயிகள் பயிரிட்டு பயன்பெறலாம். ஜம்முவில் உள்ள மண்டல ஆராய்ச்சி ஆய்வு கூடத்தில் கிளாசிமம்–3சி என்ற வீரிய ஒட்டு ரகம் 1995–ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதில் 90 முதல் 95 சதவீதம் யூஜினால் என்ற மருந்து பொருள் உள்ளது. தற்போது இந்த ரகம் ஆர்.ஆர்.எல்–ஓசி–14 என்ற பெயரில் ஜம்மு, உத்திரபிரதேச மாநிலங்களில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டை பொறுத்தவரை கடலூரர், கன்னியாகுமரி, ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் சாகுபடி செய்யலாம்.

**நடவு முறை**

இது வறட்சியை நன்றாக தாங்கி வளரும் தன்மை கொண்டது. சமவெளியில் பயிரிட ஏற்றது. குளிர்ச்சியுள்ள தட்பவெட்ப நிலைகளில் நன்றாக வளரும். எல்லா வகையான மண்வகையிலும் சாகுபடி செய்ய ஏற்றது. எனினும் உவர்ப்பு மண், செம்மண், பொறைமண் ஏற்றது அல்ல. ஒரு ஏக்கரில் விதைக்க 2 கிலோ விதைகள் தேவைப்படும். இவற்றை மே மாதத்தில் நாற்றங்கால் அமைத்து விதைக்க வேண்டும். மேடைப்பாத்திகள் தயார் செய்து ஒரு சதுர மீட்டருக்கு 2 கிலோ தொழு உரம் இட வேண்டும்.

விதைகளை நேர்க்கோட்டில் தூவி விதைக்க வேண்டும். விதைகள் சிறியதாக இருப்பதால் 1:4 என்ற விகிதத்தில் மணலுடன் கலந்து விதைக்க வேண்டும். விதைகள் விதைத்த 10 நாட்களில் நன்றாக முளைத்து விடும். இலை, சருகுகளை பாத்திகளின் மீது தூவி நீர்ப்பாய்ச்ச வேண்டும். ஜூன்–ஜூலை அல்லது செப்டம்பர்–அக்டோபர் மாதங்கள் நடவு செய்ய ஏற்றது. ஒரு ஏக்கருக்கு 150 கிலோ தழைச்சத்து, 75 கிலோ மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து கொண்ட ரசாயண உரங்களை இட வேண்டும்.

**அறுவடை–மகசூல்**

செடிகள் நடவு செய்த 120 நாட்களில் பூக்க ஆரம்பிக்கும். அப்போது தரையில் இருந்து 15 செ.மீ. நீளம் உயரத்தில் செடிகளை வெட்டி எண்ணெய் உற்பத்திக்கு பயன்படுத்தலாம். பின்னர் 3 மாத இடைவெளியில் இலைகளை அறுவடை செய்து 24 மணி நேரம் நிழலில் உலர்த்தி வாசனை எண்ணெய் தயாரிக்கலாம். ஒரு ஏக்கரில் 20 முதல் 25 டன் பச்சை இலைகள் சராசரியாக மகசூலாக கிடைக்கும். இதில் இருந்த 200 முதல் 250 கிலோ வாசனை எண்ணெய் மகசூலாக கிடைக்கும். இதன்மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெற முடியும்.

தகவல்: **அகமது கபீர்**, வேளாண் ஆலோசகர், தாராபுரம், திருப்பூர்.